54—

தூண்டில் வளைவு

***6048—திரு. கே. குப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள மீனவர் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியிலே மீனவர் கிராமங்களுக்குத் தூண்டில் வளைவுகள் அமைத்துக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். தமிழகத்திற்குத் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தப் பணிக்காக 31 கோடியே 82 இலட்சம் ரூபாய்க்கு அரசின் நிருவாக ஒப்புதலை வழங்கியிருக்கிறது. விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஐந்தாண்டுக் காலம் என்னுடைய தொகுதியில் உள்ளவர் மீன் வளத் துறை அமைச்சராக பணியாற்றியும்கூட, ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடாத சூழ்நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் என்னுடைய தொகுதியிலே சின்னகுப்பம், பெரியகுப்பம், இ.ஐ.டி.*

2013 அக்டோபர் 29]

பாரி அருகில் வீடுகளெல்லாம் கடல் அடித்துச் செல்லக்கூடிய சூழ்நிலை இருந்தபோது, மூன்று மாத காலத்தில் 3 கோடியே 20 இலட்சம் ரூபாயை உடனடியாக ஒதுக்கீடு செய்து, அந்த மக்களை கடல் அரிப்பிலிருந்து தடுத்துக் காப்பாற்றினார்கள். அதுபோல, திருவொற்றியூர் தொகுதியில் நேதாஜி நகரிலிருந்து நெட்டுகுப்பம் வரை கடல் அரிப்பைத் தடுக்க 26 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது மீனவர் கிராமங்களுக்கு 10 தூண்டில் வளைவுகள் அமைக்க 31 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்படும் என்பதையும், ஆக மொத்தம் 62 கோடி ரூபாயை, மீனவ சமுதாய மக்களின் வாழ்விலே ஒளி ஏற்றக்கூடிய மீனவர்களின் விடிவெள்ளி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதத்தில் எனது தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைச் சமர்ப்பித்து, இந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் துறையின் அனுமதி கிடைத்தவுடன் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிள்ளியூர் தொகுதி, கடற்கரை கிராமங்கள் நிறைந்த பகுதி. அங்கு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு அடித்த காற்றினாலும், புயலினாலும் அந்தப் பகுதியிலுள்ள கொல்லங்கோடு–திருப்பூர் சாலையை ஒன்றரை கிலோ மீட்டர் கடல் அடித்துச் சென்றுவிட்டது. அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களில் அநேக வீடுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஆகவே, அந்தப் பகுதிக்கு தூண்டில் வளைவுகள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கால்நடைக் கிளை மருத்துவமனை

***22853—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, அளிஞ்சிகுளம் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அளிஞ்சிகுளம் ஊராட்சியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையான 3,000